# கத்தோலிக்க திருமறை

# (Catholicism)

# Tamil Medium

# தரம் - 8

# Grade - 8

## புனித சூசையப்பர் கல்லூரி

## கொழும்பு – 10

# பாடம் - 9
# இயேசுவின் இறையாட்சிப் பணி

குறிப்புக்கள் அனைத்தையும் கொப்பியில் எழுதுக. வினா விடையை வினா விடை கொப்பியில் செய்க.

**இயேசுவின் திருமுழுக்கு**

- இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்கு பெற்றார்.

- இயேசு திருமுழக்குப் பெற்று தனது பகிரங்க வாழ்வையும் தூதுப்பணியையும் ஆரம்பித்தார்.

- இயேசு திருமுழுக்குப் பெற்றபோது மூன்று நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.
    - ✓ வானம் திறவுபடல்.
    - ✓ கடவுளின் ஆவி புறா வடிவில் இறங்குதல்.
    - ✓ வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தல்.

**திருமுழுக்கு**

- திருமுழுக்கு புதுவாழ்வையும் புதுச்சமூகத்தில் நுழைவதையும் குறிக்கின்றது.

- நாம் திருமுழுக்குப் பெறும்போது தூய ஆவியைப் பெற்று இறைப்பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றோம்.

**செயற்பாடு**

➢ இயேசு திருமுழுக்குப் பெற்ற நிகழ்வுப் படத்தை ஒட்டி வானிலிருந்து கேட்ட குரல் ஒலியை எழுதுக.

**இறையாட்சி**

- இயேசுவின் பணிவாழ்வின் மையப்பொருள் இறையாட்சியே ஆகும்.

**இறையாட்சியின் கூறுகள்**

1. அன்பு, இரக்கம், நீதி
2. ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம்
3. பரமதந்தையின் பெயரால் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என்கிற ஒருமைப்பாடு
4. நலிவுற்றோருக்கு உடல் நலம்
5. கடைநிலையில் உள்ளவருக்கு உரிமைகள்

## இயேசுவின் சோதனைகள்

- இயேசு பாலைநிலத்தில் மூன்று முறை அலகையின் சோதனைக்கு முகங்கொடுத்தார்.

**3 சோதனைகள்**

- முதலாவது சோதனை

**அலகை** : நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்.

**இயேசு** : மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை.

- இரண்டாவது சோதனை

**அலகை** : அலகை அவரை அழைத்துச்சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம் "இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்." என்றது.

**இயேசு** : உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக.

- மூன்றாவது சோதனை

**அலகை** : அவரை எருவலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, " நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும். உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் உம்மைக்குறித்து தம் தூதருக்குக் கட்டளையிடுவார். ஏன்றும் உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்.

**இயேசு** : உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் என்றும் எழுதியுள்ளதே.

- இயேசு யோர்தான் நதியில் பெற்ற சிறப்பு மிக்க அனுபவத்தின் பின் பாலை நிலத்தில் நாற்பது நாட்கள் நோன்பிருந்து செபித்து சோதனையை வெற்றிக்கொண்டு தம் பணிக்கு ஆயத்தப்படுத்தினார்.

## நாசரேத்தில் இயேசுவின் போதனை

- இயேசுவின் பணியின் நோக்கமாவது ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், துன்புறுவோர், பார்வையற்றோர் அனைவருக்கும் நல்வாழ்வு அளித்து ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவித்து எல்லா மனிதனுக்கும் மீட்பு பெற்றுக்கொடுப்பதேயாகும்.

**வினாவிடை**

1. இயேசு இறைமகனென வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.
2. நாசரேத்து தொழுகைக் கூடத்தில் இயேசு வாசித்த எசாயாவின் ஏட்டுச்சுருளின் பகுதியை எழுதுக.
3. நீர் வாழ்க்கையில் முகங்கொடுத்த சோதனை ஒன்றினைக் குறிப்பிட்டு அதனை வெற்றிப்பெற்ற முறையை விபரிக்குக.
4. "சோதனையை வென்ற இயேசு மாணவராகிய உமக்கு முன்மாதிரிகையானவர்" லூக்கா 4 : 1 – 13 பகுதியின் துணையுடன் மேலே தரப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருத்தமான கதை ஒன்று எழுதுக.
5. இயேசு எத்தனை நாட்கள் நோன்பிருந்து செபித்தார்?
6. நீர் உமது திருமுழுக்கு வாழ்விற்கு எவ்வாறு பிரமாணிக்கமாய் வாழ்வீர்?
7. இறைவன் உம்மை சோதனையிலிருந்து பாதுகாக்க வேண்டி ஒரு சிறு செபம் எழுதுக.

# பாடம் - 10
# இறையாட்சி

இறையாட்சி என்பது

- இறைவனின் அதிகாரத்திற்குற்பட்டது
- பாவத்தைத் தவிர்த்து இறைவனில் வாழ்வது
- மனித சமுதாயம் இறை சித்தத்திற்குப் பணிவது
- அன்பு, உண்மை, நீதி, நேர்மை போன்ற விழுமியங்களின் படி வாழ்வது

- இயேசு இறையாட்சி விழுமியங்களை உண்மைகள் மூலம் கற்பித்தார்.

இறையாட்சி பற்றி கூறப்படும் உவமைகள்

1. விதைப்பவர் உவமை
2. புதையல் உவமை
3. முத்து உவமை
4. வலை உவமை
5. நல்ல சமாரியர் உவமை
6. காணாமற்போன மகன் உவமை
7. செல்வரும் இலாசரும் உவமை
8. கோபுரம் கட்டுதல்
9. தாலந்துகள் உவமை
10. பத்து தோழியர் உவமை

| உவமைகள் | படிப்பினைகள் |
|---|---|
| 1. விதைப்பவர் உவமை | ▪ இவ்வுவமை இறையாட்சியின் வளர்ச்சி, அவ் வளர்ச்சிக்குள்ள தடைகள் இறைவார்த்தையின்படி உருவாகவேண்டிய மனநிலை என்பன பற்றியெல்லாம் விளக்குகிறது. தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு நாம் இடம் |

| | |
|---|---|
| | கொடுக்குமளவுக்கே புதிய வாழ்வின் விதைகள் எம்மில் செழிப்பாக வளர்ச்சி அடையும். எனவே நாம் இறைவார்த்தைக்கு கவனமுடன் செவிமடுக்கவேண்டும். |
| 2. புதையல் உவமை | ▪ இறையரசை உரிமையாக்கிக் கொள்ள எமக்குச் சொந்தமான அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும்.<br>▪ மறைந்திருக்கும் புதையல் சிறிதாயினும் அதன் பெறுமதி விலை மதிக்க முடியாதது. இறையாட்சி பெரிய லௌகீக அரசாக இல்லாதிருப்பினும் அதன் பெறுமதியை அளவிட முடியாது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். |
| 3. முத்து உவமை | ▪ விண்ணரசின் மேன்மையை இவ்வுவமை எடுத்துக் காட்டுகின்றது.<br>▪ இறையரசைத் தேடிப் பெற்றுக்கொள்ள தமக்குரியதைத் தியாகம் செய்ய வேண்டியவர்களாகின்றோம். |
| 4. நல்ல சமாரியர் உவமை | ▪ இனஇ மதஇ குல பேதங்களை மறந்து அனைவரையும் அன்பு செய்து பணிபுரிதல். |
| 5. காணாமற்போன மகன் உவமை | ▪ தனது பாவங்களுக்கு மனம் வருந்தி மீண்டும் இறைவனிடம் திரும்பி வருபவரை இறைவன் அன்புடன் வரவேற்று மீண்டும் தமது பிள்ளையாக ஏற்றுக் கொள்கிறார். |
| 6. செல்வரும் இலாசரும் உவமை | ▪ மிகுந்த செல்வத்துடன் சுகபோக வாழ்க்கை அனுபவிப்பவர்கள் ஏழைகளை மறந்து விடக்கூடாது. இறையரசைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில்இ ஏழைகளுக்கு உதவ வேண்டும். நாம் பெற்றுள்ள திறமைகளையும் ஆற்றல்களையும் விருத்தி செய்து மற்றவர்களின் நலனுக்காக பயன்படுத்துதல் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். |

- இயேசுவின் இறையாட்சிப் பணியில் மக்களுக்குத் தேவையான கொள்கைகளையும் மதிப்பீடுகளையும் மிக எளிமையாகவும் மக்கள் ஏற்கும் வகையிலும் மக்களை மாற்றக்கூடிய வகையிலும் உவமைகள் தருகின்றன.

- கடவுளுக்கே உரிய ஒரு புதிய சமுதாயம் ஏற்பட உவமைகள் தரும் போதனைகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

- இயேசு கூறியுள்ள இறையாட்சி பெரும்பாலும் மக்கள் வாழும் நிகழ்கால வாழ்வுபற்றியதே.

- இந்த உலகில் நாம் படைக்க வேண்டிய சமுதாயத்தைப் பொறுத்தே நமது எதிர்கால அல்லது விண்ணக வாழ்வு நிலையும் இருக்கும்.

- ஆகவே இயேசு மக்கள் இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும் எத்தகைய மதிப்பீடுகளை ஏற்க வேண்டும் என்பது பற்றித்தான் அதிக கவனம் செலுத்தினார் என்றால் அது மிகையாகாது.
- இயேசுவின் இறையாட்சிப் பணியும் சிறப்பாக இயேசு கூறிய உவமைகள் பலவும் நீதியும் சமத்துவமும் மிக்க சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கின்றன.

**வினா விடை**

1. இறையாட்சி என்பது என்ன?
2. இறையாட்சி பற்றி கூறப்படும் உவமைகள் 5 தருக.
3. இறையாட்சியின் பண்புகள் எவை?
4. இறையாட்சியின் பண்புகளை நீர் எவ்வாறு உம்மில் வளர்த்துக் கொள்வீர்?
5. பின்வரும் உவமைகளை எழுதுக.
    - விதைப்பவர் உவமை
    - முத்து உவமை
    - வலை உவமை

# பாடம் - 11
# இயேசு செய்த புதுமைகள்

## புதுமை

- இயற்கை நியதிகளுக்கு அமைவாக இடம் பெறாத நிகழ்வு புதுமை என அழைக்கப்படுகின்றது.
- கடவுளின் அன்பு, இரக்கம், நீதி போன்ற கொள்கைகளை இந்த உலகில் நிலைநாட்டும் விதமாக மக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டின் விளைவே அவர் ஆற்றிய புதுமைகள் அல்லது வல்ல செயல்கள்.
- இயேசு ஆற்றிய புதுமைகள் ஏறக்குறைய 30 ஆகும்.
- இயேசு ஆற்றிய புதுமைகள் அனைத்தும் அவர் இந்த உலகில் நிலைநாட்ட வந்த இறையாட்சியின் அடையாளங்களாகும்.

## இயேசு செய்த புதுமைகளின் வகைகள்

1. இயற்கையுடன் தொடர்புபட்டவை
   உதாரணம் :
   - புயலை அடக்குதல்
   - அற்புதமான மீன் பிடிப்பு
   - தண்ணீர் மீது நடந்து சென்றது.
   - தண்ணீரை இரசமாக்கியது.
2. நோயாளரைக் குணமாக்குதல்
   உதாரணம் :
   - பார்வையற்றோர் பார்வை பெறுதல்
   - கால் ஊனமுற்றோர் நடத்தல்
   - தொழுநோயாளிகள் நலமடைதல்
3. அசுத்த ஆவியை விரட்டுதல்
   உதாரணம் :
   - கெரசேனவில் பேய் பிடித்தவரை குணமாக்குதல்
   - பேய் பிடித்த இருவரை நலமாக்குதல்
4. இறந்தவர் உயிர்பெறல்.
   உதாரணம் :
   - ஜாயிலின் மகள் உயிர் பெறல்
   - நயீன் ஊரைச் சார்ந்த விதவையின் மகன்

| புதுமைகள் | கிடைக்கும் செய்தி | எம்மில் ஏற்படவேண்டிய மாற்றம் |
|---|---|---|
| ▪ காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல் | ▪ இயேசு உண்மையாகவே இறைமகன் என்பதும்<br>▪ இயற்கையும் அவருக்கு கீழ்படிகின்றன என்பதும் | ▪ நாமும் இயேசுவில் நம்பிக்கை வைத்து அவரின் வார்த்தைக்குக் கீழ்படிய வேண்டும்.<br>▪ இறைவார்த்தைக்கு ஏற்ற வகையில் எந்நேரமும் சரியானதை மட்டும் செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.<br>▪ எமது நம்பிக்கை தளர்ச்சி அடையும் போது தொடர்ந்து செபிப்பதனால் மீளவும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயற்சி செய்ய வேண்டும். |
| ▪ உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல் | ▪ இயேசு அப்பெண்ணின் வேதனையைக் கண்டு உதவிபுரிந்த முறை வெளிப்படுத்தப்படுகின்றது.<br>▪ அப்பெண் இயேசுவிடம் கேட்காமலே இயேசு உதவி செய்ய முன்வருகிறார். | ▪ நாமும் பிறரின் வேதனைகளைக் கண்டும் காணாதவாறு இராது உதவி செய்ய முன்வரவேண்டும்.<br>▪ நாம் நோயாளருக்காக நாளாந்தம் செபிக்க வேண்டும்.<br>▪ அவர்கள் அந்நோயிலிருந்து விரைவில் சுகம்பெற மன்றாடவேண்டும். |
| ▪ கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவரை நலமாக்குதல் | ▪ இறைமகனான இயேசுவின் வல்லமைக்குப் பேய்களும் கீழ்படிகின்றன<br>▪ அவர் எப்போதும் சாத்தான் பிடியிலிருந்து மனிதனை காப்பாற்றினார் | ▪ நாம் சாத்தானின் சோதனைகளுக்கு உட்படாதவாறு இருக்க இயேசுவிடம் எப்போதும் செபிப்பதோடு எந்நேரமும் எம்மை இறைபாதுகாப்பிற்கு ஒப்படைப்போம்.<br>▪ எமது வாழ்வை செபவாழ்வாக அமைத்துக்கொள்வோம் |
| ▪ இறந்தவர் உயிர் பெறல் | ▪ இயேசுவில் நம்பிக்கை வைப்போரை துக்கத்திலிருந்து எழுப்புவதைப்போல் இறப்பிலிருந்து உயிர்த்தெழச் செய்வார் | ▪ நம்பிக்கையுடன் இவ்வுலகில் நல்லவர்களாக நேர்மையுடன் வாழ்வது எமது கடமையாகும். |

வினா விடை

1. யோவான் நற்செய்தியில் இயேசு செய்த ஆறு புதுமைகளையும் எழுதி அவற்றை வகைப்படுத்துக.

2. எமது வாழ்வில் புதுமைகளை அனுபவிக்க எம்மில் இருக்கவேண்டிய பண்புகள் யாவை?

3. நோயினால் வருந்துபவர்கள் விரைவில் சுகம்பெற சொல்லக்கூடிய செபம் ஒன்றினை எழுதுக.

4. உமது வாழ்வில் புதுமையை அனுபவித்த சந்தர்ப்பம் ஒன்றை எழுதுக

5. லூக்கா நற்செய்தியில் காணப்படும் புதுமைகளை எழுதி வகைப்படுத்துக.

6. மேலே குறிப்பிட்ட புதுமைகளில் நீர் விரும்பிய 4 புதுமைகளை எழுதுக.